**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE OF ATTUR**

**SC.No. 278/2018**

**Deposition of: PW - 3 (LW - 7 )**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : வேலுசாமி | **Father Name** | : |
| **Village** | : | **Taluk** | : |
| **Nationality** | : | **Religion** | : |
| **Calling** | : | **Age** | : |

**Solemnly affirmed by in accordance with the provision of Oath Act 44 of 1969 Date: 04.12.2023 at 12.50 p.m to 12.55 p.m .**

எதிரிகள் அணைவரும் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்.

முதல் விசாரணை:

நான் தற்போது வீரகனூர் கிழக்கு தெருவில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் வீட்டிற்கு செல்லும் பைப்பை நாங்கள் மறித்து விட்டோம். அப்போது என் மகன் மருத்துவமனைக்கு செல்வதாக இருந்தார். அப்போது தன்ராஜ் என் மகன் மீது எச்சில் தண்ணீரை ஊற்றி கம்பியால் என் மகன் தலையில் அடித்தார். மாசிமலை கட்டையால் அடித்தார். அவரது தங்கை சிலம்பரசி செருப்பால் அடித்தார். என் மகன் கையை எதிரிகள் உடைத்துவிட்டார்கள். பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

1) புகார்தாரர் என் மகன். சம்பவ நடந்த சமயத்தில் நான் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். நான் பொய் சொல்கிறேன் எனறும் நான் அப்போது வேலைக்கு சென்றவிட்டேன் என்றால் அது தவறு. எங்களுக்கும் எதிரிகளுக்கும் நீண்ட நாட்களாக பேச்சுவார்தை இல்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு முன் தண்ணீர் தொட்டி உள்ளது. அது பூமியின் அடியில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். அப்போது என் மகன் ஆத்தூர் மருத்துவமனைக்கு சென்று விட்டார் என சொன்னேன். வேறு எதுவும் என்னை கேட்கவில்லை. நான் சொல்லவில்லை.

2) என் மகன் தொட்டியில் விழுந்துவிட்டார் என்றால் கையை உடைத்துவிட்டார்கள். தண்ணீர் தொட்டியில் விழுந்துவிட்டார் என்றால் சரிதான். அதனால் தான் கை உடைந்துவிட்டது என்றால் சரியல்ல. அடித்துதான் கையை உடைத்துவிட்டார்கள். மேற்படி எதிரிகளுடன் முன்விரோதம் இருந்ததால் தொட்டியில் விழுந்ததை எதிரிகள் கையை உடைத்துவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Assistant Sessions Judge,**
**Attur.**